1. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) பேரவையின் மாலை கூட்ட நேரத்தில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே முடிவு எடுக்கப்பட்டு பேரவையில் அறிவிக்கப்பட்டவாறு, இன்றைய நிகழ்ச்சிநிரலில் பேரவை இன்று மாலை 5-00 மணிக்குக் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளை ஏற்று, இன்றும், நாளையும் பேரவை மாலையில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதற்குப் பதிலாக மாலை 4-00 மணிக்குக் கூடும் என்பதை பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

3. தகவல் கோரல்

(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம், புதுப்பேட்டை பள்ளிச் சிறுமி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் நகரத்திலுள்ள Vaithialinga Nursery And Primary School*-ல் ஒன்றாம் வகுப்பு படிக்கின்ற 5 வயது பெண் குழந்தை வயிற்று வலியால் துடித்ததைத் தொடர்ந்து, அக்குழந்தையின் பெற்றோர் விருத்தாசலத்திலுள்ள தனியார் மருத்துவரிடம் காண்பித்துள்ளனர். அப்போது குழந்தையைப் பரிசோதித்த மருத்துவர், குழந்தையை பாலியல் துன்புறுத்தல் செய்துள்ளார்கள் என்பதால், அக்குழந்தையை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வலியுறுத்தியுள்ளார். அதைத் தொடர்ந்து அக்குழந்தை விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளது. அங்கு குழந்தையைப் பரிசோதித்த அரசு மருத்துவர் குழந்தையின் நிலை குறித்து விருத்தாசலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குத் தகவல் தெரிவித்துள்ளார். அதைத் தொடர்ந்து அக்குழந்தையை*

2023 ஏப்ரல் 12] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

விசாரித்த காவல் துறையினரிடம், அக்குழந்தை பள்ளியின் உரிமையாளரும், விருத்தாசலம் நகராட்சி, 30 ஆவது வார்டு தி.மு.க. நகர மன்ற உறுப்பினரின் புகைப்படத்தையும் அடையாளம் காட்டியுள்ளதாகவும், அதைத் தொடர்ந்து காவல் துறையினர் அவரை மேல் விசாரணைக்காக நேற்று, 11–4–2023 இரவு 8–00 மணியளவில் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். குற்றவாளி என்று அடையாளம் காட்டப்பட்டவர் ஓர் அரசியல் இயக்கத்தைச் சார்ந்தவர் என்பதால், கொடுங்குற்றம்புரிந்த அவரை நேற்று இரவு காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று இதுவரை அவரை கைது செய்யாதது பெரும் சந்தேகத்தை எழுப்பியுள்ளது. பாதிக்கப்பட்ட 5 வயது குழந்தை இன்னும் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறது. இச்செய்தி அனைத்து ஊடகங்களிலும் வெளிவந்துள்ளது. இதனால் கடலூர் மற்றும் விருத்தாசலம் பகுதி மக்களிடத்தில் பெரும் கொந்தளிப்பும், பதற்றமும் நிலவுகிறது. பாதிக்கப்பட்ட குழந்தை பலமுறை இந்தப் பள்ளியினுடைய உரிமையாளரால் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்ற செய்தி தற்போது கிடைத்துள்ளது. பள்ளியில் படிக்கும் பெண் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலை நிலவுவது மிகுந்த வேதனையை அளிக்கிறது. கொடுங்குற்றம்புரிந்தவர்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

****மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் தொகுதியைச் சார்ந்த ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் அந்தப் பள்ளியை நடத்திக் கொண்டிருக்கிறார். அந்தப் பள்ளியில் படிக்கின்ற 5 வயது சிறுமி தனக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக அவருடைய பெற்றோரிடம் சொல்லி, தற்போது அவரை பெற்றோர் hospital–ல் அனுமதித்துள்ளார்கள் என்பதை அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், விருத்தாசலம் சக்தி நகரில் இயங்கிவரக்கூடிய தனியார் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி ஒன்றில் யூ.கே.ஜி. பயின்று வரும் புதுப்பேட்டையைச் சேர்ந்த ஆறு வயது சிறுமி 11–4–2023 அன்று மாலை பள்ளி முடித்து வீட்டிற்குச் சென்ற பின்னர், தனக்கு வயிறு வலிப்பதாகப் பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து, அந்தச் சிறுமியை அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பரிசோதித்தபோது, அந்தச் சிறுமி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக மருத்துவர் தெரிவித்துள்ளார். இதனையடுத்து, அந்தச் சிறுமி விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முற்பகல் 11–15

இந்தச் சம்பவம் தொடர்பாக சிறுமியின் தாயார் விருத்தாசலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில், காவல் துறையினர் துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டதன் அடிப்படையில், அப்பள்ளியின் தாளாளரும், ஓய்வுபெற்ற பள்ளி ஆசிரியருமான பக்கிரிசாமி என்பவர்மீது உடனடியாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு, கைதும் செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து மேலும் விசாரணை மேற்கொண்டு, பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கை எடுத்திட நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

குற்றம் சாட்டப்பட்டுள்ள பக்கிரிசாமி, விருத்தாசலம் நகர மன்றத்தின் 30–வது வார்டு உறுப்பினராக உள்ளார் என்பதை அறிந்தவுடனேயே, அவரின் தி.மு.க.–வின் அடிப்படை உறுப்பினர் நிலை இரத்து செய்யப்பட்டு, கட்சியிலிருந்தும் நிரந்தரமாக நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதுகுறித்து மாவட்ட குழந்தைகள் நல அலுவலரும் உரிய விசாரணையை மேற்கொண்டு வருகிறார்.

எங்களது அரசைப் பொறுத்தவரையில்,—"நான் செய்தியைக் கேள்விப்படவில்லை—தொலைக்காட்சியில்தான் பார்த்தேன்"— என்று நான் சொல்லத் தயாராக இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் செய்தியை அறிந்தவுடனேயே, சம்பந்தப்பட்ட

2023 ஏப்ரல் 12] [திரு. மு.க. ஸ்டாலின்]

அதிகாரிகளோடு பேசினேன். சம்பந்தப்பட்டவரை உடனடியாகக் கைது செய்து, அது தொடர்பான செய்தியை எனக்குத் தந்தார்கள்.

இந்த அரசைப் பொறுத்தவரையில், குற்றச் செயல்களில் ஈடுபடுவோர், அதிலும் குறிப்பாக, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மனித குலத்திற்கே ஓர் அவமானச் சின்னம் எனக் கருதுகிறோம். அந்த வகையில், இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் எவராக இருந்தாலும், அவர்கள்மீது எந்தவித பாரபட்சமுமின்றி, கடுமையான நடவடிக்கையை துரிதமாக எடுத்திடுவோம் என்பதை இந்த அவையில் நான் உறுதியோடு பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. கவன ஈர்ப்பு

(அ) பொள்ளாச்சி, மேற்குப்புறமாக புறவழிச் சாலை அமைக்கும் பணிகள், விரைந்து முடித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள். (குறுக்கீடுகள்) நான் முடித்துவிடுகிறேன். இதை எடுத்ததற்குப் பிறகு உங்களுக்குப் பேச வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். இதை எடுத்து முடித்ததற்குப் பிறகு உங்களுக்குப் பதில் வரும். (குறுக்கீடுகள்) நான்தான் பதில் சொல்கிறேன் என்கிறேன், உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

***முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி ஒரு முக்கியமான பிரதான வணிக நகரம். ஏற்கெனவே அங்கு போக்குவரத்து நெரிசல் அதிகம். கேரள மாநிலத்திலிருந்து கொச்சின் வழியாக பொள்ளாச்சி நகருக்கு வரும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் இப்போது விரிவாக பேச முயல வேண்டாம். நிகழ்ச்சி நிரலில் இருப்பதை மட்டும் வாசியுங்கள். பிறகு உங்களுக்கு இரண்டு கேள்விகளுக்கு வாய்ப்புள்ளன.*